## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 147 of 2023 |
| Prosecution Witness | : | PW2 |

09.07.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : கவிதா | Calling | : சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Father Name | : வேலு | Age | : 49 |
| Village | : முசிறி | | : |
| Taluk | : முசிறி | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1,2 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முசிறி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் ஜோதிலட்சுமி என்பவர் தற்போது பணி மாறுதலில் சென்று விட்டதாலும் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம் என்பதாலும் காலதாமத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி நீதிமன்ற அனுமதி பெற்று அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.03.2023 அன்று முசிறி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் ஜோதி லட்சுமி என்பவர் துறையூர் ஆதனூர், தவிட்டுப்பட்டி கிழக்கு தெருவை சேர்ந்த வெங்கடாசலம் மனைவி ஜெயந்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.10/2023 சட்டப்பிரிவுகள் 294(b), 498(A), 506(2) இ.த.ச கீழ்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அவர் பெற்ற புகார் **அ.சா.ஆ.2** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கின் தனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 24.03.2023 ம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் சம்பவம் இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் தங்கையா, முருகேசன், ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **அ.சா.ஆ.4 மற்றும் 5** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 2 அடி நீளமுள்ள மரக்கட்டை ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.6** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் ஜெயந்தி, தேவிகா, பழனியான்டி, பாண்டியன், தனலட்சுமி, தங்கையா, முருகேசன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். பின்பு சாட்சிகள் விசாரணையில் இருந்தும் சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும் சம்பவம் உண்மை என்று தெரிந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரி வெங்கடாசலம் என்பவரை 24.03.2023 ம் தேதி முசிறி கைக்காட்டி அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழககின் மற்றொரு எதிரி மாண்புமிகு. திருச்சி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்பு இவ்வழக்கில் காயம் பட்ட ஜெயந்தி என்பவருக்கு சிகிச்சை அளித்த துறையூர் அரசு மருத்துவமனை மருத்துவர் போஜராஜன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் பெற்றுள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதல் **அ.சா.ஆ.7** ஆகக் குறியீடு

செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கில் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சுமார் 2 அடி நீளமுள்ள மரக்கட்டை ஒன்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் அவர் தனது விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிரான 29.04.2023 தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/–R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.